**ஊடக அறிக்கை** : பாலியல் வல்லுறவ மற்றும் சித்திரவதையை மேற்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இராணுவத்தின் அடையாளம் காணப்பட்ட ஆறு நபர்களை விசாரணை செய்யும்படி உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றது.

**20 மாசி 2017**

**ஜொகானாஸ்பேர்க்** : உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் இலங்கை இராணுவத்தின் பாலியல் வல்லுறவு மற்றும் சித்திரவதைகளை மேற்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு அடையாளம் காணப்பட்ட ஆறு நபர்களது தகவல்களை ஐ.நாவின் பெண்களுக்கு எதிரான அனைத்துப் பாரபட்சங்களையும் இல்லாதொழிக்கும் குழுவுடன் பகிர்ந்துள்ளது.

"22 மாசி மாதம் இதன் கூட்டத்தின் போது, CEDAW இத்தகவலை இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ளும் எனவும், நம்பகமான விசாரணைகள் இன்னும் முடிவுறாத நிலையில் இந்த ஆறு அலுவலர்களையும் உடனடியாக பணி இடைநிறுத்தம் செய்யும்படி கோரும் எனவும் எதிர்பார்க்கிறோம்'' என உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்தின் நிறைவேற்று இயக்குநர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். "பாதிக்கப்பட்டவர்களின் பெயர், முகவரிகளை இவ் அரசாங்கம் தொடர்ந்து நம்மிடம் கேட்டு வருகின்றது; CEDAW வினூடாக நாங்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களின் விபரங்களை அரசுக்கு வழங்குகிறோம்; அரசாங்கம் நீதி வழங்குவதில் கரிசனையாக இருக்கின்றதா என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளலாம். அவர்கள் எடுக்க வேண்டிய அனைத்துப் படிமுறைகளையும் எமது அறிக்கை உள்ளடக்கியுள்ளது: CEDAW அதன் முன்னேற்றத்தினை கண்காணிக்க முடியும்" என அவர் மேலும் கூறினார்.

தற்போதுதான் வெளிவிடப்பட்டுள்ள உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்தின் CEDAW விற்கான சமர்ப்பிப்பு அரச காவலில் இருக்கும்போது சித்திரவதை, மிக பயங்கரமான பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் அடிமைத்தனம் போன்றவற்றை எடுத்துரைத்த 55 பெண்களிடம் இருந்து பெறப்பட்ட சான்றுரைகளை அடிப்படையாகக் கொண்டது. இதில் 48 பாதிக்கப்பட்டவர்கள் முன்னாள் ஜனாதிபதி இராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழும் 7 பெண்கள் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் அரசாங்கத்தின் கீழும் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களாவர்.

"சித்திரவதையை மேற்கொள்வதில் பாலியல் வன்முறையைப் பயன்படுத்துவது திட்டமிட்ட கொள்கையாகக் காணப்படுவது தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் தமது கடமையில் ஜனாதிபதி சிறிசேனா மற்றும் அவரது அரசாங்கம் தவறிவிட்டது" என ஜஸ்மின் சூக்கா கூறினார். "விசாரணை செய்தல் மற்றும் அதற்குக் காரணமானவர்களை பொறுப்புக்கூற வைத்தல் என்பனவற்றில் தவறியமை சிறிசேன அரசாங்கம் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகளுக்கு உடந்தையாக இருப்பதைக் காட்டுகிறது" என அவர் மேலும் கூறினார்.

நேரடியாக மற்றும் / அல்லது கட்டளைப் பொறுப்பினூடாக பெண்களைச் சித்திரவதை மற்றும் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியதற்கும் பொறுப்பானவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்ட இலங்கையின் பல காவல்துறை மற்றும் இராணுவ அதிகாரிகளை உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் அடையாளம் கண்டுள்ளது. மிக அண்மையில், மார்கழி 2016 இடம்பெற்ற சம்பவம் உட்பட தற்போதைய அரசாங்கத்தின் கீழ் பாதுகாப்புப் படையினரால் சித்திரவதை மற்றும் / பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்ட 41 சம்பவங்களை இது தற்போது ஆவணப்படுத்தியுள்ளது.